பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝතයනගර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk

My No:-NP/09/FRM/ 2009 Date:- 06.08.2009

மாகாண திறைசேரி சுற்று இல:- PT/15/2009

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## நிதிக் கட்டுப்பாடுகள்

மாகாண நிதிப்பிரமாணம் அத்தியாயம் 3ன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மாகாண நிதிப்பிரமாணம் 104ன் பிரகாரம் நிதியாண்டிற்கான கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட முன் அதிகாரக் கையளிப்பு சம்பந்தமான அனுமதி பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெறுதல் அவசியம். அத்துடன் அங்கீகாரமளித்தல், அனுமதித்தல், உறுதிப்படுத்தல், கொடுப்பனவு செய்தல் ஆகியவற்றிற்கான அதிகாரங்கள் யாவும் இயன்றவரை வெவ்வேறு பதவிநிலை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். சில திணைக்களங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் இருந்தும் மேற்கூறிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது நிதிக்கட்டுப்பாட்டிற்கு முரணானதாகும்.

2. மேலும் திணைக்களத் தலைவர்கள்/செயலாளர்கள் தத்தமது பெயரில் எழுதப்படும் உறுதிச்சீட்டுக்களைத் <u>தாமே அனுமதிக்க முடியாது</u>. உதாரணமாக பிரயாணப்படி, விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் வேறும் படிக் கொடுப்பனவுகளைக் குறிப்பிடலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் செயலாளராயின் பிரதம செயலாளரினதும், திணைக்களத் தலைவராயின் செயலாளரினதும் <u>அனுமதியைப் பெறுதல் இன்றியமையாததாகும்</u>. அதாவது தத்தமது உறுதிச்சீட்டுக்களை தாமே அனுமதிப்பது மட்டுமன்றி தமக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்கள் மூலமும் அனுமதி பெறுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

3. கடமையின் பொருட்டு அலுவலக வாகனங்களில் வெளியிடங்களிற்கு பயணிக்கும் வேளைகளில் கடமை முடிந்து தத்தமது பணியிடங்களிற்கு திரும்பும் வரை ஆகக் கூடியது மறு நாள் வரை மட்டுமே பிரயாணப்படி, மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன சாரதிகளிற்கு வழங்கமுடியும். <u>தனிப்பட்ட தேவை காரணமாக</u> மேலும் அங்கு தங்கி சேவைநிலையம் திரும்பும் வேளைகளில் தாமதமான காலத்திற்குரிய கொடுப்பனவுகள் எதனையும் மேற்கொள்ளலாகாது. உதாரணமாக வெள்ளிக் கிழமை கடமை முடிந்தால் சனிக்கிழமை தத்தமது பணியிடங்களிற்கு திரும்புதல் அவசியம்.

4. மாகாண திறைசேரிச் சுற்றுநிருப இல PT/17/2007ன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு எல்லைக்கு மேலதிகமாக கொடுப்பனவு எதுவும் வழங்கப்படமுடியாது. விசேட சந்தர்ப்பங்களின் மட்டும் கௌரவ ஆளுனரின்/ பிரதம செயலாளரின் அனுமதி பெறுதல் அவசியமாகும்.

5. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட முன்னர் திணைக்களத் தலைவர் குறிப்பிட்ட கொடுப்பனவிற்கான ஒதுக்கீடு, கட்டுநிதி ஆகியன போதியளவு உண்டென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் அவசியமானதாகும்.

ஆ.சிவசுவாமி
பிரதம செயலாளர்

பிரதிகள்:-
1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வமா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வமா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வமா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு – வமா

} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary 060 2266501
அலுவலகம் / කාර්යාලය / Office 060 2262285
தொலை நகல் / ෆැක්ස් / Fax 026 2226952